1004

உ.

சிவமயம்.

விராலிமலை

ஸ்ரீ குமாரக்கடவுள் பதிகம்.

இது நாட்டரசன் கோட்டை எனவழங்கும் பனசையம்பதி
நகரவைசிய குலதிலகம் திருவாளர் கணகராம்

இராமநாதச்செட்டியார்

அவர்கள் விருப்பத்திற்கிணங்க
ஸ்ரீ. உ. வே. "கம்பராமாயணப்பிரசாரகர்" மேற்படியூர்

ப. ஸ்ரீ இராமையங்காரவர்களால்

இயற்றப்பெற்று

திரிசிராமலை தேவஸ்தானம் மானேஜர்
நாட்டரசன்கோட்டை நகரவைசிய குலதிலகம்
திருவாளர் அரு. சு. வே.
...நாதச்செட்டியாரவர்களால்
...ராஜா பிரஸ், கமல விலாஸில்
...பிக்கப்பெற்றது.

1924

28 MAY 1924

Q26:38.21192VM
M24
181847

உ

சிவமயம்.

விராலிமலை

ஸ்ரீ குமாரக்கடவுள் பதிகம்.

இது நாட்டரசன் கோட்டை எனவழங்கும் பனசையம்பதி
நகரவைசிய குலதிலகம்திருவாளர் கணகராம்

இராமநாதச்செட்டியார்

அவர்கள் விருப்பத்திற்கிணங்க

ஸ்ரீ. உ. வே. "கம்பராமாயணப்பிரசாரகர்" மேற்படியூர்

ப. ஸ்ரீ இராமையங்காரவர்களால்

இயற்றப்பெற்று

திரிசிராமலை தேவஸ்தானம் மானேஜர்
நாட்டரசன்கோட்டை நகரவைசிய குலதிலகம்
திருவாளர் அரு. சு. வே.

காசிவிசுவநாதச்செட்டியாரவர்களால்

திரிசிரபுரம் நடராஜா பிரஸ், கமல விலாஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1924

894.8111
2754

Q26:38.2M92UM

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18184?
சென்னை 600 008

உ

சாத்துக்கவிகள்.

திரிசிரபுரம் பிஷப்ஹீபர் காலேஜ்

தலைமைத் தமிழாசிரியராகிய திருவாளர்

பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

கூறியது.

விராலிமலை யமர்ந்தருளும் பாற்கரனேர்
வேற்கரத்து விமலன் றுட்குப்
பராவுறுசெந் தமிழாலோர் பதிகமியம்
பயெனநா ட்டரசன் கோட்டை
விராவுகுண நிதிராம நாததன பதிவேண்ட
விளங்கு மவ்வூர்
இராமசாமிப்புலவன் பாடியளித் தானினிமை
யியலு மாறே.

உ

சிவமயம்.

உறையூர் சைவசித்தாந்தசபைத்தனுதிகாரியும், ஸ்ரீமீனுட்சிசுந்தர வித்யாசாலைத்தலைவரும், கு. தா. லாலாப்பேட்டைச்சித்தாந்த ஞானப்பிரகாச சபைத்தலைவரும், பூவாளூர், திருவானைக்கா சைவசித்தாந்த சங்கங்களின் உபஅக்ராசனுதிபதியும், சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் அத்தியக்ஷக்ரும் ஆகிய திருவாளர் உறையூர் "சித்தாந்த சைவப்பிரசாரகர்"

தே. பெரியசாமி பிள்ளை இயற்றியவை.

சூலிருக்குங்கொண்டலினங்குடியிருக்குமுடியிருக்கு
துணர்ப்பூஞ்சோலைப் [ந்

பாலிருக்கும் விராலிமலைப்பதியிருக்கும்பரையுருவப்
பருதிநேர்வை

வேலிருக்குங்கரத்தெந்தைவிரையிருக்குமரையிருக்
விளங்குமம்பொற் [கும்

காலிருக்கும்படியெணிமுக்கனியொடு தேன்பாலமு
தைத்திருக்க [துங்

காட்டரசன்கோட்டையெனுங்கர்க்கரசனும் ராம
நாதனென்னும்
ஆட்டரசபதியாசையம்பரசங்கரர்கன்பின்
அரசன் வேண்ட
பாட்டரசர் பரவரசப்பதிகநயமதிகமுறப்
பாடினனந்
காட்டரசன்பதிராமசாமி மறையவர்திலகம்
நாவலோனே

பதிகமதைப்பாரிலுளபத்தரெல்லாம் படித்தினிய
பயன்கைக்கொள்ள
அதிகவிரைவினிலச்சிலளித்தீந்தான் சிராமலைக்கோ
ராட்சியாளன்
மதிகருணைமாட்சிகொடைவாய்மைகுணமிவைமு
வடிவுற்றூற்போல் [னெரு
வதிகமலநிதிகாசிவிசுவநாதேந்ரனென்கண்
மணி சீமானே.

சிவகங்கை ஸமஸ்தான வித்வான்
மு. ப. கணபதியா பிள்ளை இயற்றிய
நெடிலடியாசிரிய விருத்தம்.

வன்னமயிலிலேறு குகவரதன் விராலிமலைநாதன்
வாமிநீலியபிராமி மரகதவலிவழுதி மகன்
மனதுமகிழுமிளைய மகன் மறையனரற்கு மறைபொருளை
வழுத்து சாமிநாதனிருமலர் நேரடிக்குமாலையென
மன்னனீகை மதிநயத்தான் மாதர்மடலெழுதும்புயத்தான்
வாழ்க்கைநலத்தான் தருமமுண்மை வளருஞ்செயத்தான்
வளமலிந்தான்

மருவுபனைசைப்பதிவாசன் மகிபன்கயிலாசன்றவத்தால்
வந்தான் ராமநாதேந்திர வள்ளல்விள்ள மகிழ்வாக
கன்னல்பாகோகனிரசமோ கண்டுமுண்டோவுவமையெனக்
கவிஞருளங்கொள் கற்பனைகள்கவினக்கடல்சூழ்காசினியோர்
கருதிப்படித்தன்பார்ந்து சண்முகன்றுளன்றியுன்னுமல்
கருணையிரக்கங்காட்டியிசைக்கன்னித்தமிழார்ப்பதிகமதைச்
சொன்னனவன் யாரெனிலெனது தோழன்தொழுகுலத்
துதித்தான்

தூயன்ராமாயண பொருளைச்சொல்லால்விரிக்குஞ்சுகுணமுள
தோன்றலான்றகலையுணர்ந்தான் சுதிசேர்பண்ணின்றொடர்
புடையான்

சுகவான்ராமசாமியெனத்துதிசேர்ந்தேழு சுந்தரனே.

உ

குகமயம்.

விராலிமலை

ஸ்ரீ குமாரக்கடவுள் பதிகம்.

ஸ்ரீ கணேசர் காப்பு.

சீரார் விராலிமலைச் செவ்வேட் கொருபதிகம்
ஏரார் தமிழி லியம்பவே - நேராக
வந்துதவுஞ் செய்ய மழைமதக்கைம் மாமுகத்தான்
கந்தமலர்த் தாளிணையே சரண்.

நூல்

செம்மைசேர்க் திலங்குக் தாமரை யென்னச்
சேமமார் தொண்டர்க ளன்பாற்

றினம்பரா வுறுதா ளிணைகளும் பொன்னூற்
சிறந்திடு மாடையுஞ் செகங்கண்

மும்மையு மஞ்ச லென்றுகாத் தருளு
மூன்றுநான் காகிய தோளும்

முத்திய புவன முறுக்கிய சூரன்
முதலினோர்க் கடிந்தபொய் வேலும்

தம்மைநேர் கருணைத் தடங்கண்முந் நான்குந்
தமிழ்கமழ் வாயிரு மூன்றுஞ்

சதுர்மறை காணுப் பொருளெனற் கேற்ற
சந்திர வதனமோ ராறும்

இம்மையே நாயே னின்புறக் காட்டி
யிணையிலா வாழ்வுதந் தருள்வாய்

இமையநேர் சிமைய விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (௧)

ஏதமார் வினையாற் பல்பிறப் புழன்றான்
கேறிமா னிடவடி வமைந்தும்

இலகிய வறிவற் றிருந்துமா யையினா
லெண்ணிய பாலனே முதலாப்

பேதமார் பருவ மெவற்றினு நன்மை
பேணிலாப் பாவியேன் பெரிதும்

பித்தனா யலைந்தே னலதுன தாளைப்
பேசிலேன் பிறப்பினை யறுக்கும்

நீதியோ ருரைத்த வழிசிறி தறிந்து
நீசனேன் பற்றிடே னெனது

சீர்மைநீ காண்டி யாதலி னெனது
கெடிய தீவினைவலி நீக்கி

ஈதுனக் கினிநல் வழியென முன்வந்
தினிதரு ளிமையவ ரெவரும்

ஏத்திவந் தனைசெய் விராலிமாமலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (உ)

வஞ்சியர் மோக மாகிய வலையில்
வளைப்புண்டங் கவர்கவர் மொழியே
மறையென மதித்து மருவவர் முயக்கே
மன்னிய வீடென மயங்கிப்
பஞ்செனப் பறந்து திரிந்ததல் லாதுன்
பதமலர்க் கருச்சனை புரியப்
பாவியேன் மறந்தே னமன்றமர்க் கென்ன
பகருவேன் பரதவிக் கின்றேன்
குஞ்சரி வள்ளி கொழுநனே கோழிக்
கொடியுடைக் குமரனே யடியார்
குழுக்களுக் கரணே குன்றகந் துளைத்த
கோலவே லேந்திய குகனே
எஞ்சலில் படைவீ டாறினுந் தலங்கள்
எண்ணிறந் தனவினு மிருப்பாய்
ஏழையற் கருள்செய் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (௩௰)

அறம்பல புரியப் பெரியவர்க் குதவ
அமைபொருள் பெரிதிலே னலாமல்
ஆதுலர்க் கினிதாயொரு மொழி யேனும்
அளித்திடாக் கசடனே னவாவின்
மறம்பல புரிந்து வாழ்ந்தநா ளல்லான்
மன்னிய சுதினமொன் றேனும்
வாழுநா ளினுக்குள் ளாகநற் செயல்கள்
மனத்தினி னினைக்கவு மதியேன்
புறம்பல திரிந்து பெறும்பல னில்லேன்
பொய்யனே னுய்யுமா புரிவாய்
புண்ணியம் பொலியுந்திண்ணிய கருணைப்
புரையிலா னந்தமாக் கடலே
இறந்திடு மிதயத் திருந்தவ ருண்ணும்
இன்சுவை யமுதமே தேனே
ஏதிலார்க் கருளும் விராலிமா மலையில்
இருந்தருள் வேழிற்குரு பரனே. (௫)

181847.
சென்னை-600 008

சூதொடு களவு கோபம்பொய் யாதி
தொக்கபா தகமற வேண்டும்

தூயவ னுதல் வேண்டுநின் னடிக்குத்
தொண்டுபூண் டொழுகுதல் வேண்டும்

மாதர்கண்மாய வலையற வேண்டும்
மனமொரு வழிப்பட வேண்டும்

வஞ்சக ருறவு வழிகெட வேண்டும்
வான்மதி மன்னிட வேண்டும்

யாதினு மினிய விரதமா தவங்கள்
யாவுமே வெய்திடல் வேண்டும்

யாணர்வாழ் வருளல் வேண்டுநின் னன்றி
யிலையுயிர்த் துணையெனல் வேண்டும்

ஈதலிற் சிறந்த விறைவனீ யடியேற்
கிவையரு ளுவதொரு பெரிதோ

ஏற்றமார் தருசீர் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (ரு)

பொன்னினை மேரு வெனக்குவித் திட்டுப்
பூவைமார் பலாண்டிசை பரவப்
புகர்முகப் பூட் கைப் பிடரிவர்க் தூர்க்தொண்
புவனிமூன் ருண்டிடு பொற்பும்
தென்னவன் வளர்த்த தென்றமிழ் மொழிமுன்
றேசமார் மொழிகளெவ் வெவையுக்
தேர்ச்சிபெற் றுயர்ந்த சீர்முதல் விதியுக்
திறம்படத் தெரிக்து நாற்கவியும்
பன்னிடும் புலவர் யாவரும் பரவும்
பண்பெலாம் படைத்துமென் பயனும்
பளகறு மனத்தால் வாக்கினு லுடம்பால்
பரமகிற் காட்படார் பதரே
இன்னிசை மொழிகொள் வள்ளிபா லேகி
யேனன்மா வுண்டவென் னிறையே
ஏலமார் சாரல் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (அ)

மதன்மதித் திடும்வா லிபத்தினுங் குமா
வயதினும் வயோதிகத் தினிலும்
மண்ணொடு பொன்பெண் ணெண்ணுமூவி தமாம்
வலியபே ராசைவா ரிதியில்
கிதமுயன் றிடுபுன் மதிச்சிறி யவராம்
கீசர்த கேர்மைதா கினைக்கில்
கேத்திர மிலாதான் முண்மர வனத்தே
கேர்ந்தவா ராகிடு மென்றே
மதிமிகு பெரியோ ருரைத்தசொன் மறந்தேன்
மருவுமவ் வாசையிற் சிறந்தேன்
வஞ்சக கிறைந்தே னெஞ்சகங் குலைந்தேன்
வலியவக் தாட்கொளின் வாழ்வேன்
இதங்கொண்முத் தமிழி லிறைமைகொள் புலவ
ஈசனுந் துதிசெயராசனே
எத்தலே விணையில் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (எ)

நித்திய நைமித் தியச்செயன் மறந்தேன்
நினைப்பிடை நின்றிரு வடியை
நினைகதிலேன் யோக நெறிசிறி தறியேன்
நித்தியா நித்திய மறியேன்
பத்தியு மில்லேன் பெரியர்சொற் கொள்ளேன்
பாத்திரா பாத்திர மறியேன்
பாமர னெனைப்போற் பாரினி லுண்டோ
பரிவினுற் சிறியனுக் கிரங்கி
தத்திமி யெனநன் னடமிடுஞ் சிகியில்
தையலா ரிருவருண் மகிழத்
தனியொளிச் சத்தி வேற்படை தாங்கிச்
சமன்வரும் போதுவந் தருள்வாய்
இத்தரை முதலா முலகொரு மூன்று
மேத்துசீ ரெண்குணக் குன்றே
இயம்பல முழங்கும் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (அ)

தாய்சினக் கேம வதிதிருத் தந்தை
தங்கிய கைலைவாழ் வுடையான்
தமையனே வமைமா தங்கவத் திரனர்
தனியெழி லிந்திரை தனையை
வேய்நிறை குறிஞ்சிக் கொடிச்சிநின் பெண்டிர்
விண்ணுடன் மண்ணுமீ ரடியாய்
மேவியீ ரடியா லளந்தவன் மாமன்
விளங்குசீ வீரவேற் சாமி
ஆயிடி லுறவாற் றனிமையா லுனக்கிங்
கியாரிணை யென்றறிந் தடியேன்
அணுகியுன் பெருமை யறைவனென் சிறுமை
யறிவையா தலினருள் புரிவாய்
எய்பவக் கடனின் றிருங்கரை யுறுவா
னியலுமா தவக்கலத் திவர்ந்தார்க்
கேற்றமா ரிலக்காம் விராலிமா மலையில்
இருந்தருளெழிற்குருபரனே, (கூ)

மன்பெரு வாழ்வு தந்துயிர் வாழ்வான்
வன்னியின் பொறியென வந்தே
மடந்தைய ரறுவர் வளர்த்திட வளர்ந்து
மலைமகட் கொரு மக வாகி
தென்பரங் குன்ற மேரகஞ் செந்தில்
திகழுமா வினன் குடி யாதித்
திகழுறு படைவீட் டகத்தும்பஃ றலத்தும்
தேவர்வாழ் திருநக ரத்தும்
அன்பர்க ளெங்கெங் கிருந்தெணு வாரோ
அங்கங்கு மமர்ந்தினி திருந்தும்
ஆதியிற் கீரன் பாடல்கேட் டருளி
யவன்சிறை வீட்டியும் பொதிகை
இன்புறு முனிவற் கியன்முதற் றமிழ்கள்
இயம்பினோ யெனையும்வந் தாள்வாய்
இணையிலா வளங்கொள் விராலிமா மலையில்
இருந்தரு ளெழிற்குரு பரனே. (ம

உ

சத்திவேலர் நித்தந்துணை.

பல்லவி

காட்சி கண் காட்சியே
கந்தன் விராலிமலைக் — காட்சி

அநுபல்லவி

ஆட்சியான இந்திரலோகம்
தாட்சியாகுந்தந்திர போகம் — காட்சி

சரணம்

மங்கம்மாள் தங்குமிடம்
வசந்தனுக்கும் — ஆர்த்தி

மாமலையின் காட்சி
மனதுக்கு வெகு — நேர்த்தி

வாவிகளுஞ் சோலைகளும்
வைகுமனச் — சேர்த்தி

மங்கையரிளமை சொல்ல
வாய்க்கு நல்ல — கீர்த்தி

மல்லிகைமணக்கும் நாலு = ரோட்டு நல்ல
மாசிலா தகட்டடத்தின் = ரேட்டு வாயால்
சொல்லுவதெப்படி இதோர் = பாட்டு
கண்ணில்
தோன்றுமெங்கும் போலீசார் = பீட்டு

முடுகு
மலைவளத்தின் = பாட்டம்
மயில்முருகன் = நாட்டம்
மதிக்கமனத் = தேட்டம்
வளர்ந்திடுங் கொண்டாட்டம் = காட்சி

சுபம் சுபம் சுபம்

Q26:38.21192 VM
18847
சென்னை-600 008

வாழ்த்து.

வாழி விராலிமலை வாழியுயர் செவ்வேள்
வாழியிரு மங்கையர்கள் வாழியயில்—வாழிமயில்
வள்ளல் குமரன் மதுரத் தமிழிதனை
வுள் ளுனர்கள் வாழி யுவந்து
மயில்வாகனனிருமலர்பதம் வாழ்க.